


தன்னளவில் லஷ்கர் ஒரு பெரிய தாதாதான் என்றாலும், காஷ்மீரில் அது செய்ய நினைத்த சில நாசகாரியங்களுக்கு ஒரு வாகான கூட்டணி இருந்தால், இன்னும் நன்றாக இருக்கும் என்று 1999-ம் ஆண்டின் இறுதியில் இருந்தே அவர்கள் யோசிக்கத் தொடங்கியிருந்தார்கள்.

திட்டமிடுவதோ, அதற்கு வேண்டிய படை பலம் மற்றும் பண பலத்தைத் தயார் செய்வதோ, பெரிய காரியமில்லை. போய் கட்டிவா என்றால் வெட்டி வரும் ஆட்களுக்கும் பஞ்சமில்லை. ஆனாலும், தன் தரப்பு இழப்புகளை அவர்கள் மிகக் கணிசமாகக் குறைக்க விரும்பினார்கள். தவிரவும், இரண்டு வேறு வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்து ஒரு காரியத்தைச் செய்யும்போது, பின்னால் கிளைமாக்ஸில் வந்து இறங்கி, அதன் பிறகு புலனாய்வைத் தொடங்கும் போலீஸுக்கு மேலதிகக் குழப்பத்தை உண்டு பண்ணலாம்.

அவர்கள் குழம்பிக் கொண்டிருக்கும் நேரத்தில், குட்டையில் இன்னும் சில மீன்களைப் பிடிக்கலாம். தவிரவும் காஷ்மீருக்காகப் போரிடும் இயக்கங்களிடையே ஒரு குறைந்தபட்சப் பொது செயல்திட்டம் இருப்பதும் நல்லது என்று அவர்கள் நினைத்தார்கள்.

காலமும் கூட்டணிக்குச் சாதகமாக இருந்தது. முதன் முதலில் லஷ்கர் இ தொய்பா, தன் சக போராளி இயக்கமான ஹிஸ்புல் முஜாஹிதீனுடன் ஒரு டை அப்புக்கு ஏற்பாடு செய்ய முயற்சி மேற்கொண்டது.

அதிக சிரமம் இல்லை. லஷ்கருடன் ஒப்பிட்டால், ஹிஸ்புல்லின் அந்நாளைய பலம் குண்டு கல்யாணத்துக்கும் ஓமக்குச்சி நரசிம்மனுக்கும் ஒப்பிடத்தக்கது. ஹிஸ்புல் முஜாஹிதீனும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலிருந்து இயங்கும் அமைப்புதான். பாகிஸ்தான் ரிப்பன் வெட்டி, அட்சதை தூவி, குத்து விளக்கு ஏற்றித் திறந்து வைத்த அமைப்பும் கூட. இந்தியாவுக்கு உட்பட்ட காஷ்மீர் பகுதியில்தான் இவர்களுக்கும் உத்தியோகம்.

ஆனாலும், நினைப்பில் இருந்த வீரமும் வேகமும் செயலில் முடியாமல் இருந்தது. பலமின்மை காரணம். தவிரவும் துல்லியமாகத் திட்டமிட்டுச் செயல்படுத்தக்கூடிய கமாண்டர்கள் ஹிஸ்புல்லில் இல்லை.

எனவே, கூட்டு நடவடிக்கைகளுக்காக லஷ்கர் அழைப்பு விடுத்தபோது, மனப்பூர்வமாகச் சம்மதித்தார்கள். செயலின் வெற்றி மட்டுமல்ல; லஷ்கர் போன்ற பிரமாண்ட இயக்கத்துடன் இணைவதன் மூலம் அவர்களுக்கு வேறு பல லௌகீக லாபங்களும் இருந்தன.

வேறென்ன? அல்வா பொட்டலமா தரப்போகிறார்கள்? ஆயுதங்களும் பணமும்தான்.

பதிலுக்கு லஷ்கர் அவர்களிடம் முதன்மையாக எதிர்பார்த்த உதவி, புள்ளி விவரங்களைச் சேகரிப்பது.

எங்கே யார் யார் இருக்கிறார்கள்? இந்துக்கள் அதிகம் வாழும் பகுதி எது? ஹிந்து தலைவர்கள் இருக்கும், புழங்கும் இடங்கள் எவை? ராணுவ அதிகாரிகளின் இருப்பிடங்கள், தொலைபேசி எண்கள். அவர்களது வீடு, மனைவி, மக்கள் குறித்த தகவல்கள். ஜம்முவிலுள்ள முக்கிய அரசாங்க அலுவலகங்களின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய விவரங்கள். ஒவ்வொரு கட்டடத்திலும் உத்தியோகம் பார்க்கிற ஹிந்துக்களின் எண்ணிக்கை.

ஹிஸ்புல் செய்ய வேண்டியதெல்லாம் இதுபோன்ற அடிப்படைக் கேள்விகளுக்கு விடையளிப்பது. சுருக்கமாகச் சொன்னால், லஷ்கருக்கு 'கூகிளா'க இருப்பது. கேட்ட தகவலைக் கொடுக்கும் காமதேனுவாக இருப்பது.

தவிரவும், காஷ்மீர் மாநிலத்தில் நடைபெறும் அரசியல் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள், முக்கிய அரசாங்க மீட்டிங்குகள் குறித்த முன் தகவல் அறிக்கை லஷ்கருக்கு வேண்டியிருந்தது. சுருக்கமாகச் சொல்வதென்றால், ஒரு பகுதி நேர பி.ஆர்.ஓ. வேண்டும். ஹிஸ்புலை அப்படித்தான் அவர்கள் பயன்படுத்த நினைத்தார்கள்.

உதாரணமாக, ஒரு சமயம் அவர்கள் ஸ்ரீநகரில் சிறப்புச் செயல் பிரிவு என்னும் பெயரில் அரசாங்க அமைப்பொன்று இயங்கி வருவதைத் தற்செயலாகக் கேள்விப்பட்டார்கள். 'அதென்ன சிறப்புச் செயல் பிரிவு?

கூப்பிடு கூகிளை' ஓடி வந்தார்கள் ஹிஸ்புல் ஆட்கள். 'இதுதான் பெயர். சிறப்புச் செயல் பிரிவு. யார் இவர்கள்? என்ன சிறப்பு? உடனே, உடனே அத்தனை விவரங்களும் வேண்டும்.' ஆஞ்சநேயர் மாதிரி அப்படியே கடலைத் தாண்டிப் பாய்ந்தது ஹிஸ்புல். குறிப்பிட்ட பிரிவைக் குறித்த அத்தனை விவரங்கள், அந்த அமைப்பு செயல்படும் கட்டடத்தின் ப்ளூ ப்ரிண்ட், வாஸ்து வகையறா வரைக்கும் அள்ளிக் கொண்டு வந்துவிட்டார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீநகர் காவல் படையினரைக் கொண்டு அமைக்கப்பட்டது அந்தச் சிறப்புப் பிரிவு. சுருக்கமாகவும் செல்லமாகவும் எஸ்.ஓ.ஜி. விரிவாக, Special Operations Group. இவர்களுடைய வேலை ஸ்ரீநகர் பகுதியில் பனிக்கு அடுத்தபடியாக, நீக்கமறப் பரவியிருக்கும் தீவிரவாத அமைப்புகளைக் கண்டுபிடிப்பது. அவர்களது செயல்பாடுகளைக் கண்டறிவது. பிறகு, முடிந்தால் அழித்தொழிப்பது.

'அப்படியா? சரி, முதலில் இவர்களை நாம் அழித்துவிடலாம்' என்றார் அந்த லஷ்கர் அதிகாரி.

ஹிஸ்புல் ஆட்கள் அலறிவிட்டனர்.

'ஐயய்யோ, அது மிக பலத்த பாதுகாப்புக்கு உட்பட்ட பகுதி. நாம் நுழையவே முடியாது!'

'அப்படியா? மிகவும் நல்லது. ஒரு முயற்சி செய்து பார்ப்பதில் தவறில்லையே?'

லஷ்கருக்கும் ஹிஸ்புலுக்கும் இருந்த அடிப்படை வேறுபாடு இதுதான். அடி அல்லது அழி. லஷ்கருக்குத் தெரிந்தது இந்த இரண்டுதான். ஹிஸ்புல் இந்த விஷயத்தில் மிகவும் தயங்கியது. இது சாத்தியம் அல்ல என்று நினைத்தது. தேவையில்லாமல் லஷ்கர் ரிஸ்க் எடுக்கிறது. இளங்கன்று. அதிகமாகவே துள்ளுகிறது. சரி, நமக்கென்ன, இட்ட வேலையைச் செய்தாகிவிட்டது. இனி, எக்கேடும் கெடட்டும் என்று எச்சரிக்கை மட்டும் செய்துவிட்டு, விடைபெற்றுக் கொண்டார்கள்.

லஷ்கர் தனியாகவே தயார் ஆனது. அவர்களுக்கு மேலும் உற்சாகம் அளிக்கக்கூடிய செய்தி, மறுநாள் காலை வெளிவந்தது. 'எஸ்.ஓ.ஜி. அலுவலகத்தைச் சுற்றிப் பார்க்க நாளை ஃபரூக்

அப்துல்லா வருகிறார்.'

அட, இதல்லவா ஜாக்பாட்! துள்ளிக் குதித்தது லஷ்கர்.

இந்த இடத்தில் ஒரு கணம் நின்று யோசிக்க வேண்டும். ஃபரூக் அப்துல்லா யார்? காஷ்மீர் ஆப்பிளுக்கு நிகராகப் புகழ் பெற்ற பிரகஸ்பதி. முதலமைச்சர். தவிரவும் நேரு குடும்பத்துக்கு நெருக்கமானவர். ஏதாவது ஒரு இசகுபிசகு என்றால், இந்தியாவே அலறும். சர்வதேச அளவில் கவனம் பெறும்.

ஆனால், அவர் ஒரு முஸ்லிம் அல்லவா?

'அதனாலென்ன' என்பதுதான் லஷ்கரின் சித்தாந்தம். இது அல் காயிதாவிடமிருந்து கடன் பெற்ற சித்தாந்தம். கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளில் (கென்யா, தான்ஸானியா) அல் காயிதா மேற்கொண்ட தூதரகத் தாக்குதல் முயற்சிகளின்போது, அதிகம் இறந்தவர்கள் அமெரிக்கர்கள் இல்லை. ஆப்பிரிக்க முஸ்லிம்கள்தான். ஆனால், ஒசாமா பின்லேடன் என்ன சொன்னார்?

'இது களப்பலி. நடக்கத்தான் செய்யும். எங்கள் யுத்தத்தில் முஸ்லிம் சமூகத்தவரே இடையில் மாட்டிக்கொண்டு இறக்க நேர்ந்தாலும் யுத்தம் நிற்காது.'

ஒசாமாவுக்கு ஏகலைவர்கள் இல்லையா? வேறென்ன நினைத்துவிட முடியும்?

மறுநாள். முகமூடி அணிந்த மூன்று லஷ்கர் ஆட்கள் எஸ்.ஓ.ஜி அலுவலகத்தை நெருங்கினார்கள். ஒவ்வொருவரிடமும் தலா ஒரு வெடிகுண்டு. ஃபரூக் எப்போது வருகிறார் என்று பார்த்து, சரியாக அந்தச் சமயத்தில் வெடிகுண்டை வீசவேண்டும். பெரிய மீன் கிடைத்தால் பெரிய மீன். இல்லாவிட்டால், குட்டிக் குட்டி மீன்கள். தெளிவாகத் தீட்டப்பட்ட திட்டம். மிக எளிய திட்டமும் கூட. 'குண்டை வீசு. ஓடி வந்துவிடு.' அவ்வளவுதான்.

ஞான கர்ம சன்னியாச யோகம் பயின்ற அந்த மூவரும் சென்றார்கள். கட்டடத்தை நெருங்கினார்கள். ஃபரூக்கின் வருகைக்காக கவனமாக மறைந்து காத்திருந்தார்கள். ஆனால், ரோந்து வந்துகொண்டிருந்த ஒரு ராணுவ வீரன், அவர்களைப் பார்த்துவிட்டான்.

யாரங்கே பதுங்கியிருப்பது? அல்லது யாராவது இருக்கத்தான் இருக்கிறார்களா? எட்டிப் பார்ப்பது போல் அல்லவா தெரிகிறது? மனப்பிராந்தியா? எதற்கும் இருக்கட்டும் என்று முதலில் தனது மேலதிகாரியிடம் ஓடினான். 'ஐயா, வாசற்படிக்கருகே பிரச்னை. வருகிற முதலமைச்சர் சகல சௌபாக்கியங்களுடனும் நீடித்த ஆயுளுடனும் நன்றாக இருக்கவேண்டும்.'

கண் மூடித் திறப்பதற்குள் காவல் படை திரண்டு விட்டது.

அதிருஷ்ட அல்லது துரதிருஷ்டவசமாக அந்த ஆபரேஷனுக்கு லஷ்கர் அனுப்பியிருந்த மூன்று இளைஞர்களும் சற்று அசமந்தமாக இருந்திருக்கிறார்கள். படை சூழ்வதை அவர்கள் உணர்வதற்குச் சில வினாடிகள் தேவைப்பட்டன.

அபாயம். அதுவும் மிக அருகில். புத்தி வேலை செய்யவில்லை. அவசர அவசரமாகக் கையில் இருந்த வெடிகுண்டை வீசினான் ஒருவன். மற்றொருவனும் அப்படியே செய்தான். பிறகு, இருவரும் திரும்பி ஓட ஆரம்பித்தார்கள்.

அந்தப் பிரதேசமே கிடுகிடுக்கும்படி அந்தக் குண்டுகள் வெடித்துச் சிதறின. ஆனால், காவல் வீரர்களில் ஒருவருக்குக் கூட காயம் படவில்லை. தப்பித்தது மிகப்பெரிய ஆச்சர்யம். பிரதேசமெங்கும் ஒரே புகை மயம். கலவரம். கூக்குரல்கள். அச்சத்தின் வினோதமான பல்வேறு

வெளிப்பாடுகள்.

இந்த அமளியில் மூன்றாவது முகமூடி, கட்டடத்தின் வாசலை நெருங்கிவிட்டது. 'சகாக்கள் இருவரும் தப்புச் செய்துவிட்டார்கள். கொடுத்த வேலையை நானாவது உருப்படியாகச் செய்யவேண்டும்.' வேகவேகமாக ஓடிய அவன், தன் கையிலிருந்த அந்தக் கடைசி வெடிகுண்டை ஒரு வேகப்பந்து வீச்சாளர் போல (இந்தியப் பந்து வீச்சாளர்கள் போல் இல்லை.) கட்டடத்துக்குள் வீசினான். பிறகு, இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு ஓட ஆரம்பித்தான்.

ஒன்று. இரண்டு. மூன்று. நான்கு. ஐந்து. ம்ஹூம். அந்தக் குண்டு சமர்த்து குண்டு. வெடிக்கவில்லை. முகமூடிகள் மூவரும் தப்பிவிட்டார்கள். ஆனால், திட்டம் தோல்வி. சாதாரண தோல்வி அல்ல. படுதோல்வி.

மீண்டும் மீட்டிங். 'என்ன பிரச்னை? ஏன் கோட்டை விட்டோம்? எங்கே தவறு?' ஆயுதப் பிரிவில் இருந்தவருக்கு சரியான டோஸ். திட்டித் தீர்த்துவிட்டார்கள். 'சர்வதேச அளவில் கவனம் கிடைக்கவேண்டும் என்பதற்காக உயிரைக் கொடுத்து வேலை செய்கிறோம். கேவலம், ஒரு வெடிகுண்டை ஒழுங்காக வெடிக்கச் செய்ய முடியாதா உங்களால்?'

ஆத்திர அவஸ்தைகள் எல்லாம் தீர்ந்தபின் மீண்டும் ஃப்ரெஷ்ஷாக உட்கார்ந்து யோசித்தார்கள். 'இந்த முறை, குறி தவறக்கூடாது. பெரிய மீன் வேண்டாம். சிறிய மீன்களுக்கு வலை விரிப்போம். எவ்வளவு சிக்குகிறது என்று பார்ப்போம்.'

கஞ்சத்தனமாக இரண்டு மூன்று பேரை அனுப்பாமல் இம்முறை ஒரு சிறிய படையையே தயார் செய்தார்கள். 'நாங்களும் வருகிறோம்' என்று கடைசி நேரத்தில் ஹிஸ்புல் ஆட்கள் சிலரும் இணைந்து கொண்டார்கள். நிறைய ஒத்திகை எல்லாம் பார்த்தார்கள்.

ஆட்டத்துக்கு நாள் குறித்தார்கள். டிசம்பர் 27, 1999.